பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**23 06 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் உயரிய பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி கௌரவித்தார்.
2. கடந்த 12 ஆண்டுகளில் வேளாண் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
3. இந்தியா — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் குறித்து மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் இன்று, அமெரிக்க தூதர் **Sergiogor**-வுடன் ஆலோசனை நடத்தினார்.
4. மத்திய பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வு **CUET** முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
5. கார்பன் மாசுகளால் ஏற்படும் பாதிப்பை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆய்வு செய்ய வேண்டும் என்று ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ் வலியுறுத்தியுள்ளார்.

-

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>>

நாட்டின் உயரிய பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி கௌரவித்தார்.

பத்ம விபூஷன், பத்ம பூஷன், பத்ம ஸ்ரீ ஆகிய மூன்று முக்கிய பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இலக்கியம் மற்றும் கல்வித்துறையில் பத்ம விபூஷன் விருது மூத்த பத்திரிகையாளர் திரு நாராயணனுக்கும், சமூக சேவைக்கான பத்ம விபூஷன் விருது திரு K T தாமஸ்-க்கும் குடியரசுத் தலைவர் வழங்கி கௌரவித்தார்.

முன்னாள் டென்னிஸ் வீரர் திரு விஜய் அமிர்தராஜ், திரைப்பட நடிகர் திரு மம்முட்டி, பின்னணி பாடகி திருமி அல்கா யாக்னிக் ஆகியோருக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.

சென்னை ஐ ஐ டி இயக்குநர் திரு காமகோடி, திரைப்பட நடிகர் மாதவன், கர்நாடக இசையில் சகோதரிகள் ரஞ்சனி — காயத்ரி ஆகியோருக்கும், மிருதங்க இசைக்கலைஞர் திருவாரூர் பக்தவச்சலத்திற்கும், பேராசிரியர் திரு கே ராமசாமி ஆகியோருக்கும் பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

<<<<<<>>>>>>>

வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்கான NAFED நிறுவனம் மூலம், நாடு முழுவதும் சுமார் 74 லட்சம் விவசாயிகள்

பயனடைந்து வருவதாக, மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று, இந்நிறுவனத்தின் ஏல விற்பனைக்கான **NAFEX** இணையதள சேவையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ் சிங் சௌஹான், வளமான மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பணிகளில் வேளாண் துறை ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த **12** ஆண்டுகளில் வேளாண் சாகுபடி, குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**2014**-ம் ஆண்டில் இருந்ததைவிட, **44** சதவீதம் உற்பத்தி அதிகரித்துள்ளது என்றும் திரு.சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

இந்தியா — அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் குறித்து, மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல், இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு. **Sergio Gor**-உடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையின்போது, இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து ஆலோசித்ததாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

குறிப்பாக, இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது அமெரிக்கா தற்காலிகமாக விதித்துள்ள 10 சதவீத வரி அடுத்த மாதம் 24-ந் தேதி வரை மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும் என்பதால், அதற்கு முன்பாக, வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வது குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

வேளாண் வளர்ச்சிக்கு மத்திய அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருவதாக பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழுவின் தலைவர் பேராசிரியர் திரு மகேந்திர தேவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

உரத்துறையை மேம்படுத்தும் வகையில், நானோ யூரியா, வேம்பு கலந்த யூரியா போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஊட்டச்சத்துடன் இணைந்த வேளாண் மானியம் உள்ளிட்ட திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் மொத்த வருவாயில் ஐந்தில் ஒரு பங்கு வேளாண்மையிலிருந்து கிடைப்பதாகவும், மொத்த பணியாளர்களில் 43 சதவீதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புற வளர்ச்சி நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கு ஆதாரமாக விளங்குவதாகவும் அவர் கூறினார்.

வேளாண் மற்றும் வேளாண்சார் துறைகளின் வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் 4 புள்ளி நான்கு சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கால்நடை மற்றும் மீன்வளத்துறையின் வளர்ச்சி ஏழு சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும் திரு மகேந்திர தேவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

சேலம் மாவட்டத்தில் பெண் குழந்தைகளை பாதுகாப்போம் - பெண் குழந்தைகளை படிக்க வைப்போம் திட்டத்தின்கீழ் சிறப்பு தூதர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், பேசிய சேலம் மாவட்ட ஆட்சியர் திரு இளம்பகவத், பெண் குழந்தைகளின் முக்கியத்துவம், அவர்களுக்கு அரசின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்டங்கள் குறித்து இவர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவார்கள் என்று தெரிவித்தார்.

*(Sound Byte — இளம்பகவத் - 53 Sec. )*

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவி, பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் கல்வி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தப் போவதாக தெரிவித்தார்.

*(Sound Byte — மாணவி - 22 Sec. )*

<<<<<<>>>>>>>

மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலை பட்டப்படிப்புகளில் சேருவதற்கான பொது நுழைவுத் தேர்வு முடிவுகளை, தேசிய தேர்வு முகமை இன்று வெளியிட்டுள்ளது.

CUET இணையதளத்தில் இந்த முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாண்டு 15 லட்சம் பேர் இத்தேர்வுகளுக்காக விண்ணப்பித்திருந்ததாகவும், இதில் 11 லட்சம் பேர் மட்டும் தேர்வு எழுதியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 321 நகரங்களிலும், 13 வெளிநாட்டு மையங்களிலும் இத்தேர்வுகள் நடைபெற்றதாகவும் தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>

கார்பன் மாசுகளால் நீர், நிலம் மற்றும் காற்றுக்கு ஏற்படும் பாதிப்புகளை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆய்வு செய்ய வேண்டும் என்று ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ் வலியுறுத்தியுள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் என்ற தலைப்பில் நடைபெற்ற பருவநிலை விழிப்புணர்வு வார நிகழ்ச்சியில் பேசிய அவர், பருவநிலை பாதிப்பு குறித்து ஆய்வு செய்யும் நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிறுவனங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

2030-ஆம் ஆண்டுக்குள் இந்நிறுவனங்கள் காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தி கட்டமைப்பில் முழுமையாக செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய வேண்டும் என்றும் திரு அன்டோனியோ குட்ரஸ் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>>

இளைய தலைமுறையினர் அரசியல் சாசன மற்றும் ஜனநாயக மாண்புகளை அறிந்துகொள்ளும் வகையில் நாடு முழுவதும் வந்தே மாதரம் முகாம்கள் நடத்தப்படும் என்று மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் 20 முகாம்கள் நடத்தப்படும்.

இதில் 15-லிருந்து 29 வயதுக்கு உட்பட்ட 150 இளைஞர்கள் பங்குபெறுவர்.

ஒவ்வொரு முகாமிலும் ஆறு வெளி மாநிலங்களை சேர்ந்த இளைஞர்கள் இதில் பங்குபெறுவர்.

வடகிழக்கு மாநில இளைஞர்கள் இம்முகாம்களில் கண்டிப்பாக இடம்பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் **50** சதவீதம் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதலாவது வந்தே மாதரம் முகாம் நாளை மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் தொடங்குகிறது.

இந்த முகாம் இம்மாத இறுதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

துருக்கி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Udit Kamboj** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-1, 6-3** என்ற செட் கணக்கில், உஸ்பெகிஸ்தானின் **Maxim Shin**-ஐ வென்றார்.

------------

**ஜெர்மனியில் நடைபெற்றுவரும் உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இதுவரை 5 தங்கம், 4 வெள்ளி, 7 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.**

**<<<<<<END>>>>>>>**